676 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அங்கீகாரம் ரத்து செய்யப் பட்டது தொடர்பாகக் கல்வி அமைச்சர் அவைக்கு அளித்த அறிக்கையில் பிழை அல்லது தவறு இருப்பதாக விதி 113-இன் கீழ் சுட்டிக் காட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னிடத் திலும் கொடுத்திருக்கிறீர்கள். அரசால் வழங்கப்பட்டது 31-5-1992 வரையில்தான். அதற்குப் பிறகு இன்றைக்கு அது இல்லை. (குறுக்கீடு)

அது 31-5-1992 வரை. அதைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

முற்பகல் 11-30

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டவணை 5 மற்றும் 6— இரண்டையும் கூட்டினால் 175 தான் வருகிறது. அதைத்தான் ரத்து செய்திருக்கிறார்கள். நீதிமன்றம் ரத்து செய்ததாகச் சொன்ன கணக்கு 175. 59 என்பது, ரத்து செய்கிற நேரத்திலே, அந்தப் பள்ளிக்கூடங்களே இல்லை, அவற்றை ரத்து செய்ய வேண்டிய அவசியமே இல்லை. 31— 5— 1992 உடன் அந்தப் பள்ளிகள் மூடப்பட்டு விட்டன.

4. உரிமைப் பிரச்சினைகள்

(அ) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பகுதியை 9--2-1993 ஆம் நாளிட்ட 'தினகரன்' பத்திரிகை வெளியிட்டது குறித்து— பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினை தொடர்பான தீர்ப்புரை:

திரு. குமரி அனந்தன் அவர்கள் 9-2-1993 அன்று தினகரன் நாளிதழில் வெளிவந்துள்ள ஒரு செய்தி குறித்து பேரவையில் ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பி னார்கள். அதில், பேரவை உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் தன்னைக் குறிப்பிட்டு, தான் தொகுதிக்குப் போகவில்லை என்று சாட்டிய குற்றச் சாட்டை முறையற்றது என்று கூறி, அவைத் தலைவர் அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பின்னரும்,

9—2—1993 நாளிட்ட இதழில் தினகரன் பத்திரிகை வெளியிட்டிருப்பதால் தன்னுடைய உரிமை மீறப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். இதுகுறித்து, ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு என்னுடைய தீர்ப்பை வழங்குவதாக நான் அவையில் தெரிவித்திருந்தேன்.

தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் தனது 31—3—1993 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

'' மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நடேசன் பால்ராஜ் 2 தடவை குறுக்கிட்டு, திரு. குமரி அனந்தன் சாத்தான்குளம் தொகுதிக்குப் போவதேயில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இரண்டாவது தடவை அவ்வாறு சொன்னபோது, அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தாங்கள் அனுப்பிய நகலிலிருந்து தெரிய வருகிறோம். முதல் தடவையும் அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதா என்பதை எங்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் பிப்ரவரி 8 ஆம் தேதி திரு. குமரி அனந்தன் பேசிய பேச்சின் முழுப் பகுதியின் நகலும் எங்களுக்கு அனுப்பித் தந்திடின் நாங்கள் தங்களுக்கு உரிய பதில் அனுப்புவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

எனவே, பேரவைச் செயலகம் 10—4—1993 அன்று தினகரன் செய்தி ஆசிரியருக்கு அனுப்பிய கடிதத்தில் 8—2—1993-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையின் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட தேவையான நடவடிக்கைக் குறிப்பின் பகுதி நகல் அவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது குறித்து சுட்டிக்காட்டி, திரு. குமரி அனந்தன் அவர்களது உரையின் பிற பகுதிகள் இந்தப் பிரச்சினைக்குத் தொடர்பு இல்லாதது என்பதால் அதன் நகலை அவர்களுக்கு அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகள் 9—2—1993 நாளிடப்பட்ட தினகரன் நாளிதழில் எவ்வாறு பிரசுரிக்கப்பட்டது என்பதற்கான விளக்கத்தினை மட்டும் இச்செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அப்பத்திரிகை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 30

தற்போது 28-4-1993 ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் கீழ்க்கண்டவாறு பதில் அளித்துள்ளார்:

"அவைக் குறிப்பிலிருந்து பேரவைத் தலைவர் அகற்றும் பகுதியைப் பத்திரிகைகள் செய்தியாக வெளியிடக்கூடாது என்பதை பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபுகளிலிருந்து மேற்கோள் காட்டுவது, மன்னர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றியதாகும். மக்கள் ஆட்சிக்கு இது பொருந்தாது. ஜனநாயகத்தில் சட்ட மன்றத்தைவிட மக்கள் மன்றம் பெரிது என்பதை யாரும் மறுக்க முடியாது. சட்டமன்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் அப்படியே தெரிந்துகொள்ள மக்களுக்கு உரிமை உண்டு. எனவே பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து அகற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது என்பது நமது அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல"—அவரே தீர்ப்பு வழங்கி இருக்கிறார்—"மேலும் அரசியல் சட்டப் பிரிவு 194, உட்பிரிவு 3-ன்படி பேரவையின் உரிமைகள் இன்னின்ன என்பதற்கு சட்ட வடிவம் தரப்பட்டிருக்குமானால் அது அனைத்துத் தரப்பினருக்கும் பயனுள்ளதாக இருந்திருக்கும்"—அரசியல் சட்டத்திற்குப் புது விளக்கம் தருகிறார். "ஆகவே தினகரன் வெளியிட்ட செய்தியின் மீது திரு. குமரி அனந்தன் அவர்கள் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினையில் பேரவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தங்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்."—அதுவும் அவர்களே முடிவு எடுத்துக்கொண்டார்கள். பேரவைக்கு எந்த வேலையும் அவர்கள் வைக்கவில்லை.

திரு. நடேசன் பால்ராஜ் அவர்கள் முதலில் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறித்தும், அவரது சாத்தான்குளம் தொகுதி குறித்தும் பேச முற்பட்டபோது நான் இன்னொரு உறுப்பினரைச் சொந்த முறையில் குற்றம் சாட்டக்கூடாது என அறிவுறுத்தியிருந்தேன். மீண்டும் திரு. நடேசன் பால்ராஜ் அதே குற்றச்சாட்டைச் சொல்ல முற்படவும் நான் குற்றச்சாட்டு கூடாது என்றும் அந்தக் குற்றச்சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்றும் அவையிலேயே அறிவித்தேன். ஆனால் தினகரன் செய்தி ஆசிரியர் அனுப்பியுள்ள 28-4-1993-ஆம் தேதியிட்ட கடிதத்தில் பேரவைச் செயலகத்தின் 23-3-1993 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பிய பகுதி நகலில் இருப்பதுபோல குற்றச்சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுவதாகப் பேரவைத் தலைவர் சட்டப் பேரவையில் முறைப்படி அறிவித்ததாகத் தங்களுக்குத் தகவல் இல்லை எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

1993 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-35

செய்தி ஆசிரியரின் இந்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத்
தக்கதாக இல்லை. ஏனெனில் இந்தக் குற்றச்சாட்டுப்
பகுதி இரண்டு வெவ்வேறு நேர்வுகளில் குறிப்பிட்டது
அல்ல. ஒரே ஒரு நேரத்தில் அடுத்தடுத்து குறிப்பிடப்பட்டு,
பேரவைத் தலைவரால் நீக்கப்பட்ட பகுதியாகும், இவ்
வாறு இருக்க, செய்தி ஆசிரியரின் விளக்கம் பிரச்சினை
யைத் திசை திருப்புவதாக உள்ளது. மேலும் அவர் தனது
கடிதத்தில் அவைக்குறிப்பிலிருந்து அவைத் தலைவர்
அகற்றும் பகுதிகளைப் பத்திரிகைகள் செய்தியாக வெளி
யிடக்கூடாது என்பதை பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபு
களிலிருந்து மேற்கோள் காட்டுவது மன்னராட்சிக் காலத்
தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றியதாகும் என்றும்
மக்களாட்சிக்கு அது பொருந்தாது என்றும் கூறியுள்ள
தோடு ஜனநாயகத்தில் சட்டமன்றப் பேரவையைவிட
மக்கள் மன்றம் பெரிது என்றும். சட்டமன்ற நிகழ்ச்சிகள்
அனைத்தையும் அப்படியே தெரிந்துகொள்ளும் உரிமை
மக்களுக்கு உண்டு என்றும், பேரவைத் தலைவர் அவைக்
குறிப்பிலிருந்து அகற்றும் அனைத்து நடவடிக்கைகளையும்
பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது என்பது அரசியல் சட்டத்
திற்கேற்புடையது அல்ல என்றும் புது விளக்கம் தந்துள்
ளார்கள்.

மேற்படி கூற்றிலிருந்து இப்பத்திரிகை, சட்டமன்றத்தின்
உரிமைகள் குறித்து மிகத் தவறான எண்ணம் கொண்டுள்ளது
தெள்வாகப் புலனாகிறது. பேரவையின் உரிமைகள்
என்னென்ன என்பது குறித்து சட்டமியற்றும்வரை
பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட
பேரவையின் உரிமைகள் யாவும் இச்சட்டமன்றத்திற்கும்
பொருந்தும். இந்நிலையில் பேரவைத் தலைவர் அவைக்
குறிப்பிலிருந்து அகற்றும் அனைத்து நடவடிக்கைகளையும்
பத்திரிகைகளில் பிரசுரிக்கக்கூடாது என்பதை ஏற்றுக்
கொள்ள முடியாது என இப்பத்திரிகை ஆசிரியர் தெரிவித்
திருப்பது விந்தையாக உள்ளது.

அரசியல் சட்டம் இயற்றிய மாமேதை அம்பேத்கார்
அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்த பல அடிப்படைக் கோட்
பாடுகளையே கேலி செய்யும் வகையில் இருப்பதாகவே
இப்பத்திரிகை ஆசிரியர் விளக்கத்தைக் கருதவேண்டியுள்ளது.
மேலும் இப்பேரவைக்குள்ள இறையாண்மையையும்,
இந்தியப் பாராளுமன்ற மரபுகளையும் மதிக்கும் மனப்
பக்குவமும் இப்பத்திரிகைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.
இப்பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி மற்றும் அது
தொடர்பாக செய்தி ஆசிரியர் அளித்துள்ள விளக்கம்
யாவற்றையும் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போதே

உரிமை மீறிய செயல் என்பது தெளிவாகிறது. எனவே உரிமைக் குழுவுக்கு அனுப்பி இதனை ஆய்ந்து, தக்க மேல் நடவடிக்கைகளுக்காகப் பரிந்துரை வழங்குமாறு கேட்டு பேரவைத் தலைவருக்கு இப்பிரச்சினையில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவை உரிமைக் குழுவுக்கு இப்பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

5. முன்னாள் உறுப்பினர் ஒருவர் பெயரை பேரவைத் தலைவர் தவறாகக் குறிப்பிட்டதாக 'தினமணி' பத்திரிகை வெளியிட்ட செய்தி குறித்து.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தினமணி பத்திரிகை சம்பந்தமாக (குறுக்கீடு) நேற்றைய தினம் நான் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லசிவம் என்று முதலில் தெரிவித்த கருத்தை, ஒரு பத்து நிமிடத்திற்குள்ளே வந்து அதை இன்றைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அல்ல, அன்றைய சென்னிமலைத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். நல்லசிவம் என்று பேரவையிலேயே அறிவித்து விட்டேன். பத்து நிமிடத்துக்குள்ளேயே இரண்டாவது முறையாக பேரவையில் வந்து தெரிவித்த கருத்தை விட்டுவிட்டு நான் முதலில் சொன்ன கருத்தை தினமணி பத்திரிகையில் வெளியிட்டு இருப்பதை ஒரு அவை மீறல் பிரச்சினையாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இருந்தாலும் பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோளாகவும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பேரவையில் நடைபெறுகின்ற சம்பவங்களை, சமயங்களில் சிலபல சிறு தவறுகள் நேர்ந்திருக்குமேயானால் உடனடியாக வந்து அதை மறுக்கிறபோது அந்த மறுப்பையும் வெளியிடுவது தான் பத்திரிகா தர்மம் ஆகும். எனவே முதலில் தெரிவித்ததை மட்டும் போட்டுவிட்டு இரண்டாவதாக தெரிவித்ததைப் போடாமல் இருப்பது தவறானதாகும். இதைப்போன்ற தவறுகளைத் தவிர்க்குமாறு பத்திரிகையாளர்களை கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் முதலில் நான் தெரிவித்த கருத்து காரணமாக அதைப் போட்டிருக்கிறார்கள். இரண்டாவது, உடனடியாக அதை நான் மறுத்ததைப் போடாமல் இருப்பது தவறுதான். அத்தகைய தவறுகளைத் தவிர்க்குமாறு பத்திரிகையினரைக் கேட்டுக் கொள்கிறேன்.